**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4688

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 08.10.2021

Accepted: 25.11.2021

Published: 01.01.2022

Citation:
Savita, K. "Savvadumalaiyil Pallavar Kala Nadukal." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 3, 2022, pp. 212–17.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.4688

*Corresponding Author:
gsavitha85@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Savvadumalaiyil Pallavar Kala Nadukal

**Dr. K. Savita**
*Head and Assistant Professor, Department of Tamil*
*Adiyaman College of Arts and Science for Women*
*Siniwasa Nagar, Uthangarai, Krishnagiri District, Tamilnadu, India*

**Abstract -** World monster history can be divided into pre-history and post-history. The Stone Age, Stone Age, and New Stone Age are important landmarks of prehistoric nomadic society. The history of the human race became clear after the civilization of the human race and the beginning of the arts such as agriculture, architecture and medicine. The historical period of India starts from the Indus Valley. Archaeological remains parallel to the Indus Valley are widely found in Tamil Nadu. Buried cities include Keezhadi, Kodumanal and Adichanallur (Muthumakkal Thazhigal).
Ancient man left his fellow human beings who lived and died with him naturally without any burial. Then the stoneworkers set up inscriptions, punches and identified the dead. Its developmental stage is the mediators.

**Keywords:** Tamil, History, Ancestor, Worship, Nadukal, Savvadumalai, Tolkappiyam, Purananuru

**References**

1. Rajamanikanar, M. 1970. *Pathupattu Aaraichi*, Chennai, University of Chennai.
2. Avai Duraisami, S. 1977. *Purananuru Moolamum Urayum*, Chennai, Kazhaka Veliyeedu.
3. Nagasami, R. 1972. *Sengam Nadukarkal*, Chennai, Tamil Nadu Archaeological Survey.
4. Tamilannal. 2008. Tolkappiyam - Urai, Madurai, Meenakshi Puthaga Nilayam.
5. Natarajan, P.R. 2004. *Thirugnanasambandar Swamigal Thevaram*, Chennai, Uma Pathipagam.
6. Mariasouza, A & Mohan Gandhi, K. 2014. *Nannan Sei Nannan Nattin Varalatru Thadayangal*, Short Study of the Central Institute of Classical Tamil Studies.

**Interview**

1. Poonkunran, R., Dr. (70), Deputy Director of the Archaeological Survey of Tamil Nadu.

# சவ்வாதுமலையில் பல்லவர் கால நடுகல்

***முனைவர் கோ. சவிதா***
தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
ஊற்றங்கரை, கிருட்டிணகிரி

***ஆய்வுச்சுருக்கம்***
*உலக மாந்தரின வரலாற்றை, வரலாற்றிற்கு முன், வரலாற்றிற்குப் பின் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கலாம். கற்காலம், பெருங்கற்காலம், புதிய கற்காலம் போன்ற காலங்கள் வரலாற்றிற்கு முந்தைய நாடோடி சமூகத்தின் முக்கிய அடையாளங்களாகும். மனித இனம் நாகரிகம் அடைந்து வேளாண்மை, கட்டடக்கலை, மருத்துவக்கலை போன்ற கலைகள் தொடங்கிய பிறகு மனித இன வரலாறு தெளிவுபடலாயிற்று இதை வரலாற்றுக் காலம் எனலாம். இந்தியாவின் வரலாற்றுக்காலம் சிந்துவெளியில் இருந்து தொடங்குகிறது. சிந்துவெளிக்கு இணையான தொல்லியல் எச்சங்கள் தமிழகத்திலும் பரவலாகக் கிடைக்கின்றன. புதையுண்ட நகரங்களான கீழடி, கொடுமணல், ஆதிச்சநல்லூர் (முதுமக்கள் தாழிகள்) போன்றவற்றைக் கூறலாம். தொல் மனிதர் தன்னோடு வாழ்ந்து இறந்த சகமனிதர்களை எவ்வித அடக்கமும் செய்யாமல் இயற்கையாக விட்டுச்சென்றனர். பிறகு கல்திட்டைகள் கல்வட்டங்கள், குத்துக்கல் அமைத்து இறந்தவர்களை அடையாளப்படுத்தினர். இதன் வளர்ச்சியடைந்த நிலையே நடுகற்களாகும்.*

***முக்கியச் சொற்கள்:*** *நடுகல், தமிழக வரலாறு, மூதேவி வழிபாடு, தமிழக வரலாறு சவ்வாதுமலை, தொல்காப்பியம், புறநானூறு*

## பழந்தமிழ் இலக்கியங்களும் நடுகற்களும்

தமிழகத்தில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே நடுகல் நடும் வழக்கம் இருந்துள்ளது. நடுகல் எடுப்பதற்கான ஆறு நிலைகளைத் தொல்காப்பியர் கூறுகிறார். அவைக் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல் (தொல், பொருள், 63) என்பதாகும்.

தொல்காப்பியத் காலத்திற்குப் பின்னரும் நடுகல் வழிபாட்டின் சிறப்பு தமிழ்ப் பண்பாட்டில் கலந்திருந்ததைப் புறம் 335ஆம் பாடல் எடுத்துரைக்கின்றது. மேலும் சிலப்பதிகாரம், திருக்குறள் (771) ஆகியவற்றிலும் நடுகல் மரபின் நீட்சியைக் காணமுடிகிறது.

## சவ்வாதுமலையும் சங்க இலக்கியமும்

பத்துப்பாட்டில் பத்தாவது நூலான மலைபடுகடாம், செங்கண்மாத்துவேள் நன்னன் சேய் நன்னனின் நாட்டு வளத்தை 583 அடிகளில் பாடியுள்ளது. நன்னனின் மலை "நவிரமலை" என்பதை இந்நூல் வெளிப்படுத்துகிறது. நவிரமலை என்பது சவ்வாதுமலையின் ஒரு கூறான பருவதமலையே என்பது மா. இராசமாணிக்கனாரின் கருத்து (பத்துப்பாட்டு ஆராய்ச்சி, 1970,ப - 46).

பருவதமலை மட்டுமே நவிரமலையா அல்லது ஒட்டு மொத்த சவ்வாதுமலையும் நவிரமலையா என்கிற எண்ணம் மலைபடு கடாமை நுணுகி ஆராயும்போது ஏற்படுகிறது. எனவே சவ்வாதுமலையும் அதன் கூறான பருவத மலையும் சேர்ந்ததே நவிரமலை என்பது பொருத்தமாக இருக்கும் என்பது கட்டுரையாளரின் கருத்து. ஏனெனில் மலைபடுகடாமில் கூறப்படும் கூத்தர்களின் மலைப் பயணம், 19 வகையான ஓசைகள் அனைத்தும் சவ்வாதுமலைக்கே பொருந்தி நிற்பதை வெள்ளிடைமலையாக அறியலாம்.

நன்னன்சேய் நன்னனின் மலைநாட்டில் ஏராளமான நடுகற்கள் இருந்தன. அவற்றைக் கூத்தர்கள் கண்டு இசைமீட்டி, வணங்கிச் சென்றனர் என்று மலைபடுகடாம் உரைக்கிறது.

**"ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்தென**
**நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்**
**செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட**
**கல்ஏசு கவலை எண்ணுமிகப் பலவே"**
**(மலைபடு 386 - 389)**

என்னும் பாடலடிகள் போரில் வீரமரணம் அடைந்தோரின் பீடையும் பெரும் புகழையும் நடுகற்கள் தாங்கி நிற்கின்றன என்ற கருத்தைப் பதிவு செய்துள்ளது. எனவே தமிழகத்தில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழர் பண்பாட்டில் தன்நாட்டிற்காக உயிர்விட்ட வீரனுக்கு நடுகல் நடும் வழக்கம் இருந்ததை அறியமுடிகிறது. தமிழகத்தில் மிகுதியான நடுகற்கள் செங்கத்தில் இருப்பதாகத் தொல்லியல்துறைப் பதிவுசெய்கிறது (செங்கம் நடுகற்கள், 1971, ப - 10). நடுகற்கள் தமிழகத்தில் போர் வீரர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளோடு போரிட்டு வீரமரணம் அடைந்தவர்களுக்கும் (புலிகுத்திப்பட்டான், பன்றி குத்திப்பட்டான், குதிரை குத்திப்பட்டான், யானைகுத்திப்பட்டான்) நடுகற்கள் நடப்பட்டுள்ளன. மேலும் நாய், சேவல், கிளி போன்ற உயிரினங்களுக்கும் நடுகற்கள் உள்ளன.

இந்நடுகற்களில் பலவகையுண்டு. சுவர்க்கக் காட்சி நடுகற்கள், உடன்கட்டை (சதி) நடுகற்கள், நவகண்ட நடுகற்கள் என்றழைக்கலாம்.

## சவ்வாதுமலையில் பல்லவர் கால நடுகல்

சவ்வாதுமலையில் வரலாற்றிற்கு முற்பட்ட கல்திட்டைகள், கற்கோடாரிகள் போன்றவை காணப்படுகின்றன. வரலாற்றுச் செய்திகள் என்று சொல்லும்போது நன்னன் சேய் நன்னனின் காலமான சங்க காலத்திலிருந்து தொடங்குகிறது. சங்ககால நடுகற்கள் செங்கம் மற்றும் சவ்வாதுமலைப் பகுதிகளில் இதுவரை எதுவும் கண்டறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சவ்வாதுமலையில் பல்லவர் காலம், பிற்காலச் சோழர் காலம், சம்புவராயர் காலம், நாயக்கர் காலம் என்று தொடர்ச்சியான நடுகல் வரலாறுகளைக் காணமுடிகிறது. சவ்வாதுமலையில் கிடைக்கக்கூடிய பழமையான நடுகல்லாக "சிங்க விஷ்ணு" காலத்தைச் சேர்ந்த இந்நடுகல்லையே கூறலாம்.

## நடுகல் அமைவிடம்

வேலூர் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட சவ்வாதுமலைப் பகுதியில் 32 கிராமங்கள் உள்ளன. இவை முறையே புதூர்நாடு (10) புங்கம்பட்டு நாடு (14) நெல்லிவாசல் நாடு (8) என்று மூன்று பிரிவுகளின் கீழ் உள்ளன. இதில் நெல்லிவாசல் நாட்டிற்கு உட்பட்ட மேல்பட்டு என்னும் ஊரில் இந்நடுகல் உள்ளது.

## மேல்பட்டில் மூன்று நடுகற்கள்

இம்மேல்பட்டு என்னும் ஊரில் மூன்று நடுகற்கள் உள்ளன. 1. பெரிய வேடியப்பன் 2. சின்ன வேடியப்பன் 3. காளியம்மன் என்னும் பெயர்களில் நடுகற்கள் வணங்கப்படுகின்றன. செங்கம், சவ்வாதுமலை பகுதியில் நடுகற்கள் வேடியப்பன் மற்றும் சின்ன வேடியப்பன் இரண்டும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த நடுகற்களாகும். கல்வெட்டுகள் எதுவும் இவற்றில் இல்லை.

காளியம்மன் என மக்கள் வணங்கும் சிலை நடுகல்லாகும். நடுகல் பெரிய வேடியப்பன் கோயில் எதிரேயுள்ள பரந்த சமவெளிப் பகுதியில் நடப்பட்டுள்ளது. இதைக் கோபக்கார சாமி என்று வணங்குகின்றனர்.

வேடியப்பனுக்குப் பலி கொடுக்கும் போது இந்த சிலைக்கும் பலி கொடுப்பது வழக்கில் உள்ளது. இந்நடுகல்லின் தோற்றத்தை வைத்து மக்கள் காளியம்மன் என்கின்றனர். தலையின் பின்புறம் உள்ள நீண்ட முடியைக் கொண்டையிட்டு இவ்வீரன் கட்டியுள்ளது ஒரு காரணம். கையில் வில், அம்பை வைத்திருப்பது இரண்டாவது காரணம். (காளியம்மன் பெண் தெய்வம் என்பதால் கொண்டையிட்டுள்ளது. கையில் கொடிய ஆயுதங்களை காளி வைத் திருப்பாள் எனவே இது காளி என்று ஊர் மக்கள் கூறுகின்றனர்).

மேலும் இவ்வீரனின் மார்பில் அம்பு தைத்துள்ளது. காலுக்கடியில் “கெண்டி” எனப்படும் கற்குடம் உள்ளது. இந்நடுகல் 3. 04. 2013 ஆம் ஆண்டில் கட்டுரையாளரின் தலைமையில் நடந்த ஆய்வில் கண்டறியப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அந்த ஆய்வுக் குழுவில் இடம்பெற்றிருந்த தொல்லியல் துறை, மேனாள் உதவி இயக்குனர் ர.பூங்குன்றனால் படியெடுக்கப்பட்டு, வாசிக்கப்பட்டது. இந்நடுகல்லில் உள்ள வாசகம் வருமாறு,



**படியெடுக்கும் போது எடுத்தபடம்**



**மேல்பட்டு நடுகல்**

1. சிங்க விண் (ண பருமற்கு)
2. நிரை விற்றது
3. யக்க பொரை பாச்சுங்
4. இயகல (ட்டு) ச்சஞை மூத்து
5. பிணங்
6. கி தொறுக்
7. கொண்டு ப
8. ட்டான்

என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

இந்நடுகல் கல்வெட்டு சில இடங்களில் சிதைந்துள்ளது. பல்லவ மன்னன் சிங்க விஷ்ணுவின் காலம் என்பதை அறிய முடிகிறது. இந்நடுகல் வீரனின் மாட்டு மந்தையைப் பகைவர்கள் கவர்ந்த போது, அவர்களோடு போரிட்டு உயிர் விட்டான் என்பதை வெளிப்படுத்துகிறது. இக்கல்வெட்டில் வருகின்ற “தொறு” என்ற சொல்லாட்சி திருவண்ணாமலை, செங்கம் வட்டார நடுகல் கல்வெட்டுகள் மற்றும் இலக்கியங்களில் பரவலாகப் பயின்று வரும் சொல்லாட்சி. இதற்குப் பசுக் கூட்டம் என்பது பொருள்.

திருஞானசம்பந்தர், தேவாரத்திலுள்ள திருவண்ணாமலைப் பதிகத்தில் “தொறு” என்கின்ற சொல்லைப் பசுக் கூட்டம் என்ற பொருளில் கையாள்வது குறிப்பிடத்தக்கது.

**"தூமா மழைநின்று அதிரவெருவித் தொறுவின் நிரையோடும்"**
***(திருவண்ணாமலைப் பதிகம் 2:1, ப -214)***
என்னும் பாடலடிகளால் அறியலாம்.

இந்நடுகல் கல்வெட்டு குறித்து ர.பூங்குன்றன் பின் வருமாறு கூறுகிறார். "நன்னன் நாட்டு வரலாற்றுத் தடயங்கள் தொடர்பான நடுகல் ஒன்று மொழலைக்கு அருகிலுள்ள புதூர்நாடு என்ற ஊரில் (மேல்பட்டு சிற்றர் புதூர் நாட்டிற்கு அருகே உள்ளது) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல்லைத் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி தமிழ்த்துறையினர் கண்டுப்பிடித்துள்ளனர். அக்கல்வெட்டுத் தொடக்கத்தில் உடைந்துள்ளது. இரண்டாம் வரியில் சிங்க விண்ண பருமற்கு என்று தொடங்குகின்றது. இக்கல்வெட்டில் குறிக்கப்படும் மன்னன் சிங்க விஷ்ணு (கி.பி 554 - 590) பல்லவர் மரபில் வந்த மன்னனாவான். இவ்வரசன் கி.பி 6ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தான். ஆனால் கல்வெட்டு எழுத்தமைதி கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்கு உரியதாக உள்ளது. இது ஒரு முரண்பாடு. இந்த நிலை சிம்மவர்மனுடைய பள்ளங்கோயில் செப்பேட்டிலும் காணப்பெறுகிறது. (சிம்மவர்மன் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதி காணப்படுகின்றது.) நடுகல் கல்வெட்டு மாட்டுமந்தையைக் கவர்ந்தபோது ஏற்பட்ட பூசலில் இறந்து பட்ட ஒரு வீரனைப் பற்றிக் குறிக்கிறது". (நன்னன் சேய் நன்னன் நாட்டின் வரலாற்றுத் தடயங்கள், 2014, ப - 172)

வட்டெழுத்துடன் கூடிய பழமையான நடுகல் கல்வெட்டாக இக்கல் உள்ளது சிம்மவர்மன் காலத்தைச் சேர்ந்த கி.பி. 6 ஆம் நூற்றாண்டில் இருந்து தான் சவ்வாது மலையில் பழமையான நடுகல் கல்வெட்டு கிடைக்கிறது என்பது நோக்கத்தக்கது. மேலும் சங்ககால நடுகல் மற்றும் கல்வெட்டுகள் தேடலுக்கும் ஆய்வுக்கும் உட்படுத்த வேண்டிய ஒன்றாய் உள்ளது.

## முடிவுரை

தமிழர் வாழ்வியலில் காலந்தோறும் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ள போதிலும், நடுகல் வழிபாடு நிலைத்திருப்பது தமிழர் வழிபாட்டின் எச்சமாகவே உள்ளது. பல்லவர் கால நடுகல் தமிழர் பண்பாட்டின் ஆழத்தைக் காட்டுவதாக உள்ளது. இறந்த வீரனின் பெரும் புகழைத் தாங்கி, நடுகற்கள் நிற்கும் என்று மலைபடுகடாம் கூறியதையே மேல்பட்டு நடுகல்லில் காணமுடிகிறது. சவ்வாதுமலையில் கிடைக்கப்பெற்ற முதல் வட்டெழுத்து நடுகல் என்பதால் இப்பகுதியின் பழமை அறியலாகிறது. பல்லவ அரசர்களின் நேரடி ஆட்சிமுறையில் இம்மலை இருந்ததால் தான் மன்னன் பெயர், ஆட்சி ஆண்டு அனைத்தும் தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளன. சவ்வாதுமலையில் வாழ்ந்த இம்மக்கள் சிற்பக்கலை, கல்வி, அரசியல் என்று அத்துணைத் துறைகளிலும் தன்னிறைவு பெற்றவர்களாக இருந்துள்ளனர் என்பதைக் இக்கல்வெட்டு பறைச்சாற்றி நிற்கிறது.

## ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள்

1. இராசமாணிக்கனார், மா. 1970 பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னை. சென்னைப் பல்கலைக் கழகம்,
2. ஔவை. துரைசாமி. சு. 1977. *புறநானூறு மூலமும் உரையும்*. சென்னை, கழக வெளியீடு.
3. நாகசாமி, இரா. 1972. *செங்கம் நடுகற்கள்*. சென்னை, தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை.
4. தமிழண்ணல். 2008. தொல்காப்பியம் உரை, மதுரை, மீனாட்சி புத்தக நிலையம்.
5. நடராசன். பி.ரா, 2004. திருஞானசம்பந்தர் சுவாமிகள் தேவாரம், சென்னை, உமா பதிப்பகம்.

6. மரியசூசை. அ, மோகன்காந்தி, க. 2014. *நன்னன் சேய் நன்னன் நாட்டின் வரலாற்றுத் தடயங்கள்,* செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் குறுந்திட்ட ஆய்வேடு.

**நேர்காணல்**

1. முனைவர். ர. பூங்குன்றன் (70), தமிழ்நாடு தொல்பொருள் துறை மேனாள் துணை இயக்குநர்.